செ.வெ.எண்: 744 நாள்: 04.11.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற உள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

மாற்றுத்திறனாளிகளின் குறைகளை கேட்டு களைந்திடுவதற்காக புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் 06.11.2019 அன்று காலை 10 மணிக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற உள்ளது. அன்றைய குறைதீர்க்கும் நாள் சிறப்பு கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் தங்களது குறைகளை எழுத்து பூர்வமாகவோ அல்லது நேரடியாகவோ மாவட்ட ஆட்சித்தலைவரிடம் தெரிவித்து தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகாணலாம்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் தங்களுக்கு மாதாந்திர உதவித்தொகை, பராமரிப்பு உதவித்தொகை, பேருந்து பயனச்சலுகை, கடனுதவி, உதவி உபகரணங்கள், வீட்டுமனைபட்டா, இலவச வீடு, வேளான் பொருட்கள், இலவச கால்நடைகள், இலவச சலவைப்பெட்டி இதுபோன்று அரசின் பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் நலதிட்டங்கள் பெறுவது குறித்து கோரிக்கை மனுக்களையும் அளிக்கலாம்.

மேலும், இம்முகாமில் கலந்து கொள்ளும் மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவர்களால் பரிசோதிக்கப்பட்டு தேவை இருப்பின் மாற்றுத்திறனாளி சான்றுகளும் வழங்கப்படவுள்ளது. எனவே புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகள் இந்த சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தை பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**